# மலையக நாவல்கள் சித்திரிக்கும் பெரிய கங்காணி: ஒரு நோக்கு

**S.Y.Sirithar**

*Department of Languages,*
*Sabaragamuwa University of Sri Lanka*

**பிரதான சொற்கள்:** கங்காணி, பெரியதுரை, தோட்டத் தொழிலாளர், மலையக மக்கள்

**அறிமுகம்**

இலங்கையில் மலையகப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவழியினர் 'மலைகய மக்கள்' என அழைக்கபடுகின்றனர். இவர்கள் இங்கு வந்து ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் ஆகின்றன. இவர்கள் தங்களுடைய வாழ்வியல் அம்சங்களை பலநாவல்களில் பதிவு செய்திருக்கின்றார்கள். அவற்றுள் தூரத்துப் பச்சை, வரலாறு அவளைத் தோற்றுவிட்டது, வீடற்றவன், மூட்டத்தினுள்ளே, குடைநிழல் போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. இந்நாவல்களில் பெருந்தோட்டத்துறை தொழிலாளிகளிடையே முக்கிய பாத்திரத்தை வகிக்கும் 'கங்காணிமார்' பல்வேறு விதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட நாவல்களில் அக்கங்காணிமார் தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்தாடல்களின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் நோக்கிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மலையக வர்க்க அமைப்பை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1. உயர் வகுப்பினர் - தோட்ட முகாமையாளர் (துரைமார்கள்)
2. மத்தியதர வகுப்பினர் - தோட்டப் பணியாளர்கள்( Estate Staff)
3. கீழ் வகுப்பினர் - தொழிலாளர்கள்

இவர்களுள் கீழ் வகுப்பினரை மூன்று வகையாகப் நோக்கலாம்:

- மேல் மட்டம் - பெரிய கங்காணி
- கீழ் மடடம் - தொழிலாளர்கள்
- கீழ்மட்டத்திலும் கீழ்மட்டம் - வாசல் கூட்டி

பெரிய கங்காணியைப்பற்றி சி.வி. வேலுப்பிள்ளை தனது 'தேயிலை தேசம்' நூலில் "பெரிய கங்காணி என்பவர் ஆயிரத்துக்கு அதிகமான தொழிலாளர்களுக்குத் தலைவனாக இருப்பார். வீட்டுக்குரிய அத்தனை உடைமைப் பொருட்களோடும் தளபாடங்களோடும் சகல வசதிகளும் கொண்ட வீட்டில் வசிப்பார். அவரது வீட்டை வட அமெரிக்கர் வசிக்கும் சொகுசுக் கூடாரம் என்றும் கூறுவார்கள். அவரது வீட்டுக்குள் சபா மண்டபம், காரியாலயம், பூஜை ஸ்தலம், படுக்கையறைகள், சமையலறைகள், குளியலறைகள், பெண்கள் தங்கும் அந்தப்புரம் என்றெல்லாம் வசதிகள் அமைந்திருந்தன." [1] (சிவலிங்கம், மு, ப.110) எனக் குறிப்பிடுகின்றார்.

இக்கூற்று பெரிய கங்காணிமாரின் நிலையை எடுத்துக்காட்டுகின்றது. இப்படியான வசதிகளுடன் தொழிலாளர்களின் குடியிருப்பான 'லைன்' (லையம்) களின் பக்கத்திலேயே இவரது குடியிருப்பு மனை காணப்படும். சிறிய கங்காணிகள் லயத்திலேயே வசிப்பர். இவர்கள் தொழில் ரீதியாகத் தொழிலாளர்களை மேற்பார்வை செய்பவர்களாக இருந்தாலும். இவர்களுக்கு எந்தவிதமானதொரு வசதியையும் தோட்ட நிர்வாகம் செய்து கொடுப்பதில்லை.

பெரிய கங்காணியின் கடமைகள் பற்றி தனது நூலில் கூறவந்த சி.வி.வேலுப்பிள்ளை,"அவர் தொழிலாளருக்கு லயக் காம்பிராக்களை ஒதுக்கிக் கொடுப்பார். அவர்களுக்கு அரிசி வினியோகித்தார். அவர்கள் ஒழுங்காக வேலைக்கு வருவதைக் கவனித்தார். பிரட்டுக் கலைப்பதற்கு (muster brake) செல்வார். வேலைத் தளங்களுக்கு வேலைகளைக் கவனிக்கச் செல்வார். சம்பள நாளில் துரையிடம் சம்பளத்தை வாங்கித் தொழிலாளர்களிடம் கையளிப்பார். தொழிலாளர் சுகவீனமாகிவிட்டால் அவர்களைக் கவனிப்பார். தோட்டங்களில் நடக்கும் சகல நிகழ்ச்சிகளுக்கும் தலைமை வகிப்பார். தொழிலாளர்களைத் தனது டிவிசனுக்குள்ளேயே, தனது எல்லைக்குள்ளேயே வைத்துக் கொள்வதில் அவர் சமர்த்தர். தனது கூலியாள் வெளியாட்களுடன் உறவு வைத்துக் கொள்ளவோ ஒழுங்கீனமாக நடந்து

கொள்ளவோ பொலிஸ்காரர்கள் பிடித்துச் செல்லவோ விடமாட்டார்"[2] (சிவலிங்கம், மு, ப.111) எனக் குறிப்பிடுகின்றார்.

இப்படிப்பட்ட இவர் பெரிய துரைக்குச் சார்பாக இருந்து கொண்டு கூலித் தொழிலாளர்களைப் பிழிந்து எடுப்பவராகவே இருப்பார். பெரிய துரை இல்லாத இடத்தில் தொழிலாளர் முன் அவர் நடப்பது போல் நடந்தும் அவர் பேசுவது போல் பேசியும் வருவார். தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆசை வார்த்தை காட்டி தொழிலாளர்களைக் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பு இவரிடமே இருந்தது. தென்னிந்தியாவிலிருந்து தோட்டங்களுக்கு வேலைசெய்ய வருபவர்களுக்கு போக்கு வரத்துச் செலவை இலவசமாகக் கொடுக்கும்படி பெரிய துரை கொடுத்த பணத்தை அவர் இவர்களுக்குக் காட்டவே இல்லை. மாறாகக் கொடுத்தாலும் கடனாகத் தனது புத்தகத்தில் பதிந்து வைத்து அதனை அவர்களது மாதாந்தச் சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கழித்தெடுத்த பெருமையும் இவரையே சாரும்.

தென்னிந்தியாவிற்குத் தொழிலாளர்களை அழைத்துவரப் போகும் இவர் அவர்களுடன் அன்புடன் உறவாடி அவர்களை மயக்கி எப்படியாவது இலங்கையிலுள்ள தோட்டங்களுக்குக் கொண்டு வந்துவிட்டாரென்றால் அவர்களை உரிய இடத்தில் விட்டு 'கேற்றை' அடைத்து அவர்கள் வேறு எங்கும் போகாமல் பாதுகாப்பவரும் இவர்தான். சில வேளைகளில் தொழிலாளர்களின் வேலைக்கேற்ற ஊதியத்தைக் கொடுக்காமல் அதில் சிறு தொகையைப் பிடிப்பவராகவும் தொழிலாளர்களை விரட்டி விரட்டி வேலை வாங்குபவராகவும் காணப்படும் இவருக்கு ஒரு தொழிலாளி தோட்டத்தில் வேலைசெய்தால் இவருடைய சம்பளத்திற்கு மேலதிகமாக துரை இவருக்கு நான்கு சதம் வழங்குவார். சில்லறைக் கங்காணிகள் ஒருவருக்கு இரண்டு சதம் வீதம் வழங்கப்படும். இந்த வகையில் தொழிலாளர் வர்க்கத்தை தனது சுகபோக வாழ்விற்காக ஆட்டிப் படைக்கும் அல்லது சுரண்டும் ஒரு பாத்திரமாகவே பெரிய கங்காணி கருதப்படுகின்றார்.

மலையக நாவல்களும் அவருடைய மறுபக்கத்தை மிக மோசமாகச் சித்திரிக்கின்றன. அதாவது, இளம் பெண் தொழிலாளர்கள் மீது வல்லுறவு புரிதல், பெரிய துரைக்கு இளம் பெண்களை ஒழுங்கு பண்ணி அனுப்புதல், தொழிலாளர்களின் கூலியைக் கொடுக்க மறுத்தல் அல்லது குறைத்துக் கொடுத்தல், தொழிலாளர் நீதி கேட்டால் அவர்களைப் பழிவாங்கல், கணக்குப் பிள்ளையுடன் சேர்ந்து களவெடுத்தல், சாதி பார்த்தல் இவ்வாறான பல கோணங்களில் பெரிய கங்காணி சித்திரிக்கப்படடுள்ளார்.

**முறையியல்**

முற்குறிப்பிட்டவாறு முன்வைக்கப்படும் கருதுகோள், சித்திரிப்பு ஆகியவற்றின் உண்மைத்தன்மையை கண்டுரைப்பதாக அமையும் இவ்வாய்வு,

- மலையகத் தோட்டத்துறையில் நிலவும் பெரிய கங்காணி தொடர்பான கருத்தியலின் உண்மைத் தன்மையைக் கண்டறிதல்
- பெரிய கங்காணி தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை களைய முயற்சித்தல்
- காலப்போக்கில் மாறிவரும் சமூக அமைப்பில், தோட்டத்தொழிலாளர்-பெரிய கங்காணி உறவை அர்த்தமுள்ளதாக்கும் பரிந்துரைகளை முன்வைத்தல்

ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. இந்நோக்கங்களை அடைவதற்காக 'மலையக நாவல்கள் சித்திரிக்கும் பெரிய கங்காணி: ஒரு நோக்கு' என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரலாற்றுரீதியாக பெரிய கங்காணிமாரை நோக்குவதற்காக வரலாற்று விவரண முறையியல், அவற்றைத் தெளிவுபடுத்துவற்கான விளக்க முறையியல், உண்மைத் தன்மையைக் கண்டறியும் மதிப்பீட்டு முறையியல் முதலான ஆய்வு அணுகுமுறைகளக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சுருக்கமும் முடிவும்**

ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டத்துறைக்குத் தொழிலாளராகக் கொண்டுவரப்பட்டவர்களே மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். ஆரம்பத்தில் அவர்கள் மீது, பெரிய கங்காணிமார்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளே பெரிய கங்காணிமார் தொடர்பிலான அதிருப்திக்கு மூல காரணமாய் அமைந்திருக்கிறது. தமிழகத்திலேயே வாழ

முடியாத நிலையிலிருந்த விளிம்பு நிலை மக்கள், மலையகத் தொழிலாளராக வந்தபோது தமது குறைகளைத் தீர்த்து வைக்கும் பிரதிநிதிகளாக பெரிய கங்காணிமாரையே நம்பினர். தோட்டத் துரைமார்களால் வழங்கப்பட்ட, பெருந்தொகையான தொழிலாளர்களை நிர்வகிக்கும் பொறுப்பும் வரையறுக்கப்படாத அதிகாரங்களுமே பெரிய கங்காணியரை உச்சாணியில் வைத்திருந்தது. சமகாலத்தில் அவ்வாறானவொரு நிலைமை இல்லாவிட்டாலும், பெரிய கங்காணிமார் தொடர்பிலான கணிப்பீடுகள் இன்னும் மாறாமலேயே இருக்கின்றன.

**உசாத்துணை**

சிவலிங்கம், மு. 2003. *தேயிலை தேசம்*,,கொழும்பு, துரவி வெளியீடு.
மூக்கையா, ம.செ. 2000. *இன்றைய மலையகம்*,
சந்திரசேகரன் சோ. 2000. *இந்தியத் தமிழர் வரலாறு*,